**அக்டோபர் – 05**

# TNPSC துளிகள்

- சென்னை நகரத்தின் மணலி, எண்ணூர் மற்றும் மீஞ்சூரில் உள்ள தொழிற்சாலைகள் சென்னைக்கு அருகில் உள்ள கொடுங்கையூரில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மூன்றாம் நிலை எதிர்ச் சவ்வூடு பரவல் முறையிலான சுத்திகரிப்பு (tertiary treatment reverse osmosis - TTRO) ஆலையில் இருந்து நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர்கள் அளவிற்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை விரைவில் பெற இருக்கின்றன.
  - சுத்திகரிக்கப்பட்ட நீரில் கரைந்துள்ள மொத்த திடப் பொருட்களின் அளவானது (total dissolved solids - TDS) 70க்கும் குறைவாக இருக்கும். அதே நேரத்தில் குடிநீரில் TDS அளவானது 250 முதல் 500 வரை இருக்கும்.
- பிஎஸ்என்எல் சமீபத்தில் மதுரையில் 4ஜி சேவைகளை அறிமுகப் படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கோவை, சேலம், திருச்சி மற்றும் மதுரை ஆகிய நான்கு நகரங்கள் பி.எஸ்.என்.எல் 4ஜி சேவையைக் கொண்டிருக்கின்றன.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு, பிரதமர் மோடி "இந்தியாவுக்கும் உலகுக்கும் காந்தி ஏன் தேவைப்படுகிறார்?" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.
  - இந்தக் கட்டுரையானது அமெரிக்காவின் புகழ்பெற்ற செய்தித்தாளான நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிக்கையின் 'தலையங்கப்' பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- மின் உற்பத்தி நிலையங்களுக்கு நிலக்கரி விநியோகத்தை உறுதி செய்வதற்காக மின்சாரம், நிலக்கரி மற்றும் ரயில்வே அமைச்சகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக "பிரகாஷ்" (PRAKASH - Power Rail Koyla Availability through Supply Harmony) என்ற ஒரு இணையதளத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
  - இந்தத் தளமானது மத்திய மின்சாரத் துறை அமைச்சரான ஆர்.கே. சிங் மற்றும் மத்திய நிலக்கரித் துறை அமைச்சரான பிரஹலாத் ஜோஷி ஆகியோரால் கூட்டாக இணைந்து ஆரம்பித்து வைக்கப் பட்டது.
- மஹிந்திரா நிறுவனம் 51% பங்குகளுடனும் ஃபோர்டு நிறுவனம் 49% பங்குகளுடனும் ஒரு கூட்டு நிறுவனத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட இருக்கின்றன.
  - இந்த ஒப்பந்தமானது இந்தியாவில் ஃபோர்டு நிறுவன வாகனங்களை இந்தியாவில் உருவாக்கி, சந்தைப்படுத்தி விநியோகிக்கவும் மற்றும் ஃபோர்டு நிறுவன & மஹிந்திரா நிறுவன வாகனங்களை உலகெங்கிலும் அதிக வளர்ச்சியை அடைந்து வரும் சந்தைகளில் உருவாக்கி, சந்தைப்படுத்தி விற்பதற்கும் ஒரு கூட்டுநிறுவன முயற்சியை உருவாக்க இருக்கின்றது.
- நாடுகளுக்கிடையேயான நட்புறவை வலுப்படுத்துவதற்காக, மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் இலங்கை அஞ்சல் துறையானது சமீபத்தில் ஒரு அஞ்சல் தலையையும் முதல் நாள் அட்டையையும் வெளியிட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1 ஆம் தேதியன்று சர்வதேச காபி தினம் கொண்டாடப்படுகின்றது.
  - சர்வதேச காபி நிறுவனம் இத்தாலியின் மிலன் நகரில் 2015 ஆம் ஆண்டில் முதல் காபி தினத்தை தொடங்கி அனுசரித்தது.
- ராணுவ செவிலியப் பணியின் 94வது எழுச்சி தினம் அக்டோபர் 1 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
  - இது இந்திய இராணுவத்தின் ஆயுதப்படை மருத்துவ சேவைகளின் ஒரு

பகுதியாகும். மேலும் ஆயுதப் படைகளில் உள்ள ஒரே அனைத்துப் பெண்கள் படையினரும் இவர்களேயாவர்.

# தேசியச் செய்திகள்

## மாநிலங்களுக்கிடையேயான பெயர்வுத் திறன் – உணவுப் பொருள் வழங்கல் அட்டை

- 2020 ஆம் ஆண்டு ஜூன் 1க்குள் நாடு முழுவதும் "ஒரே தேசம் ஒரே உணவுப் பொருள் வழங்கல் அட்டையை" செயல்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, பின்வரும் மாநிலங்களுக்கிடையே உணவுப் பொருள் வழங்கல் அட்டையின் பெயர்வுத்திறனை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
    - ராஜஸ்தான்/ ஹரியானா
    - தெலுங்கானா - ஆந்திரா
    - மஹாராஷ்டிரா – குஜராத்
- இது ராஜஸ்தான்/ஹரியானா, தெலுங்கானா/மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரா/குஜராத்தில் வசிக்கும் பயனாளிகள் தங்கள் மாநிலத்தில் உள்ள பொது விநியோக முறையின் கீழ் தங்களது உணவுப் பொருட்களை மேற்கூறிய ஏதேனும் ஒரு மாநிலத்தில் பெற்றுக் கொள்வதைக் குறியிட்டுக் காட்டுகின்றது.
- மாநிலங்களுக்கு இடையேயான பெயர்வுத் திறன் திட்டமானது மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சரான ராம் விலாஸ் பஸ்வான் என்பவரால் தொடங்கப்பட்டது.

## 7 புதிய தலைமை நீதிபதிகள்

- உச்ச நீதிமன்றக் கொலிஜியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், 7 புதிய தலைமை நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| தலைமை நீதிபதி | நீதிமன்றம் |
|---|---|
| நீதிபதி அஜய் லம்பா | குவஹாத்தி உயர் நீதிமன்றம் |
| நீதிபதி இந்தர்ஜித் மகந்தி | ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் |
| நீதிபதி A மணிக் குமார் | கேரளா உயர் நீதிமன்றம் |
| நீதிபதி ரவி சங்கர் ஜஹா | பஞ்சாப் & ஹரியானா உயர் நீதிமன்றம் |
| நீதிபதி AK கோஸ்வாமி | சிக்கிம் உயர் நீதிமன்றம் |
| நீதிபதி LN சுவாமி | இமாச்சலப் பிரதேசம் உயர் நீதிமன்றம் |
| நீதிபதி JK மகேஸ்வரி | ஆந்திரப் பிரதேசம் உயர் நீதிமன்றம் |

# சர்வதேசச் செய்திகள்

## பொலிவியாவின் லித்தியம்

- தென் அமெரிக்க நாடான பொலிவியாவானது உலகின் மிகப்பெரிய லித்தியம் இருப்புக்களைக் கொண்டுள்ளது. இது அங்கு பரந்த சலார் டி யுயூனி உப்பு தட்டுக்குக் கீழே உள்ளது.
- உலகில் நான்கில் ஒரு பங்கு லித்தியத்தை பொலிவியா வைத்திருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- தற்போது லித்தியம் இன்றியமையாத ஒன்றாக உருவெடுத்துள்ளது. இது சிறிய மின்னணு மற்றும் மின்சார வாகனங்கள் போன்றவற்றிற்கான லித்தியம் அயன் மின்கலன்களில் பயன்படுத்தப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பயணத்தின் போது, லித்தியத்தின் வளர்ச்சி மற்றும் தொழில் துறை பயன்பாட்டிற்காக இந்தியா பொலிவியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் லட்சிய இலக்கான 30 சதவீத மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் FAME (விரைவில் இந்தியாவில் மின்சார வாகனங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் உற்பத்தி செய்தல்) என்ற கொள்கைக்கு உதவும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.



# மாநிலச் செய்திகள்

## ஹைதேரி மஞ்சில் - கொல்கத்தா


- கொல்கத்தாவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஹைதேரி மஞ்சில் வீடானது ஒரு முழு அருங்காட்சியகமாக மாற்றப் பட்டுள்ளது.



- காந்திஜி இந்திய விடுதலை தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்காமல் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் மற்றும் செப்டம்பர் மாதம் வரை இந்த வீட்டில் தங்கியிருந்தார்.
- அந்தக் காலகட்டத்தில் கொல்கத்தாவில் நடந்த வகுப்புவாத வன்முறையை முடிவுக்குக் கொண்டு வர அவர் காலவரையற்ற உண்ணாவிரதத்தை அங்கு மேற்கொண்டார்.

## உத்தரப் பிரதேசத்தில் பண்டைய புதையுண்ட நதி

- கங்கை மற்றும் யமுனை ஆகிய நதிகளை இணைக்கும் பிரயாக்ராஜில் (முன்னர் அலகாபாத்) ஒரு பழமையான, வறண்ட நதியை மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் அகழ்ந்து கண்டறிந்துள்ளது.
- தேசியத் தூய்மை கங்கைத் திட்டமானது (National Mission for Clean Ganga - NMCG) இதை நிலத்தடி நீரை மேலும் பெருக்குவதற்கான ஆதாரமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- இந்தப் "பழங்கால புதையுண்ட நதியானது" சுமார் 4 கி.மீ அகலமும் 45 கி.மீ நீளமும் மண்ணின் கீழே 15 மீட்டர் தடிமன் கொண்ட அடுக்கையும் கொண்டிருக்கின்றது.
- புராணகாலத்திய சரஸ்வதி நதி இருந்திருக்கலாம் என்று செயல்பாடற்ற நதி தொடர்பான எச்சங்களின் (பேலியோசேனல்) சான்றுகள் தெரிவிக்கின்றன.

- ஒரு பேலியோசேனல் என்பது ஒரு செயலற்ற நதி அல்லது நீரோடைக் கால்வாயின் எச்சமாகும். இது இளம் அல்லது புதிய வண்டல் மண்ணால் புதையுண்டிருக்கின்றது.
- இந்தக் கண்டுபிடிப்பானது கடந்த டிசம்பரில் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்ற – தேசியப் புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய நிலத்தடி நீர் வாரியம் ஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வயோசிரேஸ்த சம்மன் – 2019: முதியோருக்கான விருதுகள்

- மூத்த குடிமக்களின் நலனை நோக்கிய நபர்களின் சேவைகளை அங்கீகரிப்பதற்காக தலைசிறந்த மூத்த குடிமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 2019 ஆம் ஆண்டின் வயோசிரேஸ்த சம்மன் என்ற விருதினை இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- வயோசிரேஸ்த விருதானது மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தால் நிறுவப்பட்டது.
- அக்டோபர் 1 ஆம் தேதி சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்த விருதுகள் 13 பிரிவுகளில் வழங்கப் படுகின்றன. இந்த விருதுகள் 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.
- இந்த விருதுகள் 2013 ஆம் ஆண்டில் தேசிய விருதுகள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டன.



## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் நான்சென் அகதிகள் விருது

- தனது சொந்த நாடான கிர்கிஸ்தானில் அகதிகள் விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவிய மனித உரிமை வழக்கறிஞரான அசிஸ்பெக் அஷுரோவ் என்பவர் இந்த ஆண்டின் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் நான்சென் அகதிகள் விருதினை வென்றுள்ளார்.
- அவரும் அவரது அமைப்பான ஃபெர்கானா பள்ளத்தாக்கு எல்லைகளைக் கடந்த வழக்குரைஞர்கள் என்ற அமைப்பும் 10,000க்கும் மேற்பட்ட அகதிகளுக்கு கிர்கிஸ்தான் குடியுரிமையைப் பெற உதவியுள்ளன.

- அகதிகள் விவகாரத்தை ஒழித்த உலகின் முதலாவது நாடு கிர்கிஸ்தான் ஆகும்.

*இந்த விருதுபற்றி*


- விஞ்ஞானி, துருவ ஆய்வாளர் மற்றும் அகதிகளுக்கான முதல் உயர் ஆணையரான ஃப்ரிட்ஜோஃப் நான்சனின் நினைவாக இந்த விருதுக்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள் அல்லது நாடற்ற மக்கள் ஆகியோருக்கான சிறந்த சேவையை அளிப்பதை அங்கீகரிப்பதற்காக ஒரு தனிநபர், குழு அல்லது அமைப்புக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.
- இது 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

# முக்கிய தினங்கள்

## உலக சைவ தினம் - அக்டோபர் 1

- ஒவ்வொரு ஆண்டும் உலக சைவ தினமானது அக்டோபர் 1 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- இது 1977 ஆம் ஆண்டில் வட அமெரிக்க சைவ சங்கத்தால் நிறுவப்பட்ட மற்றும் 1978 ஆம் ஆண்டில் சர்வதேச சைவ சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாளாகும்.
- இந்தத் தினமானது சைவ வாழ்க்கை முறையின் நெறிமுறை, சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் மனிதாபிமான நன்மைகள் குறித்த விழிப்புணர்வைக் கொண்டு வருகின்றது.
- இது அக்டோபர் மாதத்தை சைவ விழிப்புணர்வு மாதமாகத் தொடங்கி வைக்கின்றது. இந்த சைவ விழிப்புணர்வு மாதம் நவம்பர் 1 உடன் முடிவடைகின்றது.

## சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 2




- மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் தேதி சர்வதேச அகிம்சை தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினத்தை அனுசரிப்பதற்கான கருத்தானது ஈரானைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற ஷிரின் எபாடி என்பவரால் 2004 ஆம் ஆண்டில் முன்மொழியப் பட்டது.
- 2007 ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது

அக்டோபர் 2 ஆம் தேதியை சர்வதேச அகிம்சை தினமாக நிறுவ வாக்களித்தது.

- இந்தத் தினமானது அகிம்சை மற்றும் அமைதியான சகவாழ்வு ஆகிய கொள்கைகளைப் பரப்புவதற்காக கொண்டாடப் படுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★